S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி நவம்பர் 15 * 2025 * மலர் -1 * இதழ்-167* VOL-1 * ISSUE-167 விலை ரூ.3 * பக்கம் -4

## 196 தொகுதிகளில் முன்னிலை:

# பீகார் தேர்தல் - பா.ஜ.க. கூட்டணி அமோக வெற்றி!

## அசுர பலத்துடன் மீண்டும் ஆட்சி அமைக்கிறது!!

பாட்னா, நவ.15

பீகார் சட்டசபைத் தேர்தல் 2 கட்டங்களாக நடத்தப்பட்டது. 243 தொகுதிகளிலும் இன்று காலை வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. 196 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி முன்னிலை வகிக்கிறது. எனவே பா.ஜ.க. கூட்டணி அமோக வெற்றி பெறுவது உறுதியாகி விட்டது. நிதிஷ்குமார் தலைமையில் அசுர பலத்துடன் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கிறது

243 தொகுதிகளைக் கொண்ட பீகார் சட்டசபைக்கு முதல் கட்டமாக நவம்பர் 6–ஆம் தேதி 121 தொகுதிகளில் தேர்தல் நடந்தது. 65.08 சதவீதம் வாக்கு பதிவானது. 2–ஆம் கட்டமாக நவம்பர் 11–ஆம் தேதி 122 தொகுதிகளில் தேர்தல் நடத்தப்பட்டது. 69 சதவீதம் வாக்கு பதிவானது. பாரதிய ஜனதா கட்சி, ஐக்கிய ஜனதாதளம், லோக் ஜன சக்தி (ராம் விலாஸ்), ராஷ்டீரிய லோக் மோர்ச்சா, மதச்சார்பற்ற இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா ஆகியவை தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. மாககட்பந்தன் கூட்டணியில் ராஷ்டீரிய ஜனதாதளம், காங்கிரஸ், விகாஷீல் இன்சான் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு), இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்டு கட்சி ஆகியவை அங்கம் வகிக்கின்றன. தேர்தல் வியூக வல்லுநர் பிரசாந்த் கிஷோரின் ஜன சுராஜ் கட்சி தனித்தே களம் கண்டது.

பீகார் வரலாற்றில் இந்த அளவுக்கு வாக்குப் பதிவு அதிகமாக நடைபெற்றுள்ளது இதுவே முதல் முறை. 11–ஆம் தேதி இரவே எக்சிட் போல் முடிவுகள் வெளியாயின. பா.ஜ.க. கூட்டணி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என்று எக்சிட் போல் முடிவுகள் குறிப்பிட்டன. இந்நிலையில் இன்று காலை வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. மத்தியப் பார்வையாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் வாக்குகள் எண்ணப்படுகின்றன. முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்பட்டன.

தபால் ஓட்டுகள் எண்ணப்பட்ட பிறகு வாக்குச் சாவடிகளில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தொடங்கியது. தொகுதி முன்னிலை நிலவரம் தெரியவந்துள்ளது. இதில் தேசிய ஜனநாயக கூட்டணி 196 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. ராஷ்டீரிய ஜனதா தளம், காங்கிரஸ், இடது சாரி கூட்டணி 42 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. மற்றவர்கள் 5 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறார்கள்.

அறுதிப் பெரும்பான்மைக்கு 122 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை. தேசிய ஜனநாயக கூட்டணி 3–ல் 2 பங்குக்கும் அதிகமாக வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது. பிரசாந்த் கிஷோரின் ஜன சுராஜ் கட்சி தேர்தல் தடாகத்தில் மூழ்கி காணாமல் போய்விட்டது. மகாகட்பந்தன் கூட்டணி சார்பில் முதல்வர் வேட்பாளராக முன் நிறுத்தப்பட்ட ராஷ்டீரிய ஜனதாதளத்தைச் சேர்ந்த தேஜஸ்வி யாதவ் ராகோப்பூர் தொகுதியில் முதலில் முன்னிலை வகித்தார். பிறகு அவர் பின்னுக்கு தள்ளப்பட்டு விட்டார். அத்தொகுதியில் முடிவு எப்படி இருக்கும் என்பது குறித்து சஸ்பென்ஸ் நிலவுகிறது. பொதுவாக வாக்குப் பதிவு அதிகரித்தால் மாற்றம் ஏற்படும் என்று கூறப்படுகிறது. ஆனால் இதற்கு விலக்குகளும் இல்லாமல் இல்லை. தேர்தலுக்கு முன்பு பெண்களுக்கு நிதிஷ் குமார் அரசு உதவித் தொகை வழங்கியது. இது தேர்தலில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்று கூறப்படுகிறது. ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிக அளவில் வாக்களித்துள்ளனர். பீகாரில் அதிக வாக்கு பதிவானது மாற்றம் வேண்டாம், இப்போதைய நிலையே தொடர வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியினர் வெற்றியை உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். இனிப்புகளை பகிர்ந்து கொண்டனர்.



பட்டாசுகளை வெடித்தனர். பாட்னாவில் மட்டுமல்லாமல் டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்திலும் வெற்றிக் கொண்டாட்டத்தில் பா.ஜ.க. நிர்வாகிகள் ஈடுபட்டனர். தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்களிலும் பா.ஜ.க. நிர்வாகிகள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.ரசு இன்னும் சில நாட்களில் பதவியேற்கிறது. இதற்கான பூர்வாங்க பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன. பாட்னாவில் நடைபெறும் நிதிஷ்குமார் பதவியேற்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார் என்பது குறிப்பிடத் தக்க சிறப்பம்சமாகும்.

## பீகார் முன்னணி நிலவரம்: மொத்த தொகுதிகள் - 243

(அடைப்புக்குறிக்குள் 2020 தேர்தலில் கட்சிகள் வென்ற தொகுதிகள்)

| | |
|---|---|
| **தேசிய ஜனநாயக கூட்டணி** | **196** |
| பா.ஜ.க | 88 (74) |
| ஐக்கிய ஜனதாதளம் | 78 (43) |
| லோக் ஜன சக்தி (ராம் விலாஸ்) | 22 (0) |
| இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா | 6 (0) |
| ராஷ்டீரிய லோக் மோர்ச்சா | 3 (0) |
| **மகாகட்பந்தன் கூட்டணி** | **42** |
| ராஷ்டீரிய ஜனதா தளம் | 32 (75) |
| காங்கிரஸ் | 5 (12) |
| மார்க்சிஸ்டு லெனினிஸ்டு கட்சி | 4 (19) |
| மார்க்சிஸ்டு கட்சி | 1 (2) |
| **மற்றவர்கள்** | **5** |
| ஜனசுராஜ் கட்சி | 0 |
| ஏ.ஐ.எம்.ஐ.எம். | 4 (5) |
| ஜே.எஸ்.ஜே.டி. | 0 |
| டி.பி.பி. | 0 |
| பகுஜன் சமாஜ் | 1 (0) |

# தேஜஸ்வி, தேஜ் பிரதாப் இருவருக்கும் பின்னடைவு!

## சகோதர போட்டியால் சங்கடம்!!



பாட்னா, நவ.15–

பீகார் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை எதிர்த்து மகாபந்தன் கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக களமிறங்கிய ராஷ்ட்ரிய ஜனதாதளம் தலைவர் தேஜஸ்வி யாதவ் தான் போட்டியிட்ட ரகோபூர் தொகுதியில் பின்னடைவை சந்தித்துள்ளார். சகோதர போட்டியால் ஓட்டுகள் பிரிந்ததே இந்த சங்கடத்திற்கு காரணம் என்று கூறப்படுகிறது. ராஷ்ட்ரிய ஜனதாதளம் மூத்த தலைவர் லல்லு பிரசாத் யாதவுக்கு, தேஜ் பிரதாப், தேஜஸ்வி என இரு மகன்கள் உள்ளனர். இதில் கடந்த 2015ஆம் ஆண்டு அரசியலில் களம் கண்ட தேஜ் பிரதாப், இதுவரை, இரு முறை சட்டமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். திருமண வாழ்க்கையில் சர்ச்சைகளை சந்தித்த தேஜ் பிரதாப், தனது முதல் மனைவியைப்பிரிந்தார்.அதைத்தொடர்ந்துவேறொருபெண்ணுடன் நெருங்கிய உறவில் இருப்பதாகச்சில மாதங்களுக்கு முன்பு கூறினார். இதனால் அதிருப்தி அடைந்த லல்லு பிரசாத் யாதவ், தனது மூத்த மகன் தேஜ் பிரதாப்பை ராஷ்ட்ரிய ஜனதாதளம் கட்சியில் இருந்து நீக்குவதாக அறிவித்தார். ஏற்கனவே இளைய மகன் தேஜஸ்வி யாதவ், கட்சியின் முகமாகவும், முதல்வர் வேட்பாளராகவும் இருந்து வருகிறார். இந்நிலையில், பீகார் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக, ஜனசக்தி ஜனதா தளம் என்ற கட்சியை தொடங்கிய லல்லுவின் மூத்த மகன் தேஜ் பிரதாப், சில சிறிய கட்சிகளை சேர்த்துக் கொண்டு தனித்து தேர்தலில் களம் கண்டார்.

அவரது கட்சி 44 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டது. ராஷ்ட்ரிய ஜனதாதளம் வேட்பாளர்களுக்கு எதிராக தனது கட்சி வேட்பாளர்களை தேஜ் பிரதாப் நிறுத்தினார். அதுவே தற்போது சகோதரர்கள் இருவருக்குமே பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. பீகாரின் வைசாலி மாவட்டத்தில் யாதவ், ராஜ்புத், பவன்ஸ் மற்றும் இஸ்லாமிய சமூக மக்கள் அதிகளவில் வசிக்கின்றனர். இந்நிலையில், ரகோபூர் தொகுதியில் போட்டியிட்ட ராஷ்ட்ரிய ஜனதாதளத் தலைவர் தேஜஸ்விக்கும் பா.ஜ.க. வேட்பாளருக்கும் கடும் போட்டி நிலவி வருகிறது. தொடக்கத்தில் முன்னிலை பெற்ற தேஜஸ்வி அதன் பின்னர் பின்னடைவை சந்தித்து வருகிறார். இதன் மூலம் சகோதரர்கள் இருவரிடையே ஏற்பட்ட மோதல் அவர்கள் வெற்றி வாய்ப்புக்கே வேட்டு வைத்து விட்டது என்கின்றனர்.



விழுப்புரம்மாவட்டம்76திருக்கோவிலூர்சட்டமன்றதொகுதிக்குட்பட்டதிருக்கோவிலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர் செயலியில் (BLO APP) உள்ளீடு செய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் திருக்கோவிலூர் சார் ஆட்சியர் ஆனந்த் குமார் சிங், திருக்கோவிலூர் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் சரவணன், திருக்கோவிலூர் நகராட்சி ஆணையர் செல்வி திவ்யா உட்பட பலர் உள்ளனர்.

## டெல்லியில் கார் குண்டு தாக்குதல் நடத்திய

# டாக்டரின் வீடு இடித்து தரைமட்டமாக்கப்பட்டது!

## பாதுகாப்புப்படையினர் அதிரடி !!

புதுடெல்லி, நவ.14–

காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் ஏப்ரல் 22–ஆம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர். இதில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் மே 7–ஆம் தேதி பாகிஸ்தானிலும், அதன் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் உள்ள 9–ன்பது தீவிர முகாம்களை இந்தியா குண்டு வீசி அழித்தது.

இதில் லஷ்கர்–இ–தொய்பா, ஜெய்ஷ்–இ– முகமது ஆகிய தீவிர இயக்க தலைமை அலுவலகங்களும் அடங்கும். இந்த தாக்குதலில் 150–க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அதில் ஜெய்ஷ்–இ–முகமது இயக்கத் தலைவன் மசூத் அசாரின் சகோதரி சாதியாவின் கணவரும், பிற குடும்ப உறுப்பனர்களும் அடங்குவர். இதற்கு பழிவாங்க காஷ்மீர் தீவிரவாதிகள் ஒன்றுசேர்ந்துஇருப்பதாகசிலதினங்களுக்கு முன்பே செய்தி வெளியானது. அந்த செய்தி வெளியான சில தினங்களில் அதாவது கடந்த திங்கள்கிழமை அன்று அரியானா மாநிலம் பரிதாபாத்தில் ஒரு மருத்துவரின் வீட்டிலிருந்து 360 கிலோ அமோனியம் நைட்ரேட் பறிமுதல் செய்யப்பட்டது. அடுத்த சில மணி நேரத்தில் ஒரு பெண் டாக்டரின் காரிலிருந்து 2900 கிலோ வெடிபொருள் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்த சில மணி நேரத்தில் டெல்லியில் செங்கோட்டை மெட்ரோ ரெயில் நிலையம்



அருகே சின்னலில் கார் குண்டு வெடித்தது. இதில் முதல் நாளில் 8 பேர் பலியானார்கள், 24 பேர் காயமடைந்தனர். அவர்களில் அடுத்தடுத்து 4பேர் இறந்தனர். இதனால் சாவு எண்ணிக்கை 12–ஆக உயர்ந்தது. நேற்று 35 வயது மதிக்கதக்க வாலிபர் ஒருவர் இறந்தார். இதனால் பலி எண்ணிக்கை 13–ஆக அதிகரித்தது. இந்த கார் குண்டு தாக்குதல் நடத்தியவர் உமர் நபி என்ற மருத்துவர் என்பது தெரியவந்தது. அவர், காஷ்மீர் மாநிலம் புல்வாமாவை சேர்ந்தவர்.

அவர் அமோனியம் நைட்ரேட் மூலம் வெடி குண்டை தயாரித்து வெடிக்கச்செய்து தற்கொலைப்படையாக செயல்பட்டு இருப்பதும் உறுதியானது. அவரது உடல் பாகங்கள் கைப்பற்றப்பட்டு மரபணு சோதனை நடத்தப்பட்டது. அதுவும் அவர் தான் என உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் புல்வாமாவில் உள்ள அவரது வீட்டை பாதுகாப்புப் படையினர் புல்டோசர் மூலம் இடித்து தரைமட்டமாக்கி யுள்ளனர்.

# புதுக்கோட்டையில் ஆசிரியர் தகுதி தேர்வு முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்





புதுக்கோட்டை,நவ.15

புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலக வளாகத்தேர் வுக்கூட அரங்கில் 1511 2025(சனிக்கிழமை) மற்றும் 16112025(ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் நடைபெற உள்ள ஆசிரி யர் தகுதித்தேர்வு தாள் 1 மற்றும் ஆசிரியர்தகுதித்தேர்வுதாள் 2 ஆகிய தேர்வுகளை சிறப்பாக நடத்துவதற்கான முன்னேற்பா டு க்கூட்டம் நடைபெற்றது. வந்திருந்த அனைவரையும் முதன்மை க் கல்வி அலுவலர் சண்முகம் வரவேற்று பேசினார். கூட்டத்தில் பள்ளிக்கல்வி இணை இயக்குநரும் ( தொடக்கக்கல்வி) புதுக்கோட்டை மாவட்ட கண்காணிப்பு அலுவலரான பொன்னையா கலந்து கொண்டு கூட்டத்திற்கு தலைமை தாங்கி அறிவுரைகள்ள வழங்கி பேசும்போது கூறியதாவது, ஆசிரியர் தகுதித்தேர்வு தாள் 1 மற்றும் ஆசிரியர் தகுதித்தேர்வு தாள் 2 ஆகிய தேர்வு களுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள வினாத்தாள் கட்டுக்கா ப்பாளர்கள், முதன்மைக்க ண்காணிப்பாளர்கள், துறை அலு வலர்கள், வழித்தட அலுவலர்கள், அறைக்கண்காணிப்பாளர்கள் ஆகியோர் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வழங்கப்பட் டுள்ள கையேட்டினை நன்கு படித்து அவரவருக்கு வழங்க ப்பட்டுள்ள பொறுப்புகளையும், கடமைகளையும் தெரிந்து கொண்டு எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆசிரியர் தகுதித்தேர்வினை நடத்திட கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நி றுவன முதல்வர் முனைவர் நடராஜன், மாவட்டக்கல்வி அலுவ லர்கள் முனைவர் ஆரோக்கியராஜ், மாயக்கிருஷ்ணன், கலா ராணி, பழனிவேல், புதுக்கோட்டை தொடக்கக்கல்வி ( பொ) ராஜூ, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் உதவித்திட்ட அலுவலர் செந்தில், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் முருகையன், வெள்ளைச்சாமி, மாவட்டச்சுற் றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சாலை செந்தில், முதன்மைக் கல்வி அலுவலக கண்காணிப்பாளர் வளர்மதி மற்றும் ஆசிரியர் தகுதித்தேர்விற்கு நியமனம் செய்யப்பட் டுள்ள வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள், முதன்மைக்கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், வாழித்தட அலுவ லர்கள், அறைக்கண்காணிப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், திப்பம்பாளையத்தில் மேம்படுத்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய குளத்தினை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு மலர் தூவினார். உடன் கலெக்டர் கந்தசாமி, பிரகாஷ் எம்.பி. மற்றும் பலர் உள்ளனர்.



# இன்று பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிப்பு

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெறுவதால் புதுச்சேரியில் நாளை (15.11.25) பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே விடப்பட்ட விடுமுறையை ஈடுகட்டும் வகையில் நாளை பள்ளிகள் இயங்கும் என அறிவிக்கப்பட்டிருந்து.

டெட் தேர்வு காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை விடப்படுவதாக புதுச்சேரி பள்ளிக்கல்வித் துறை அறிவித்துள்ளது.

நாளைய விடுமுறையை ஈடுசெய்ய அடுத்த ஆண்டு ஜன. 3ம் தேதி வேலைநாளாக செயல்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.



வேலூர் மாவட்டம், கீ. வ. குப்பம் ஊராட்சி ஒன்றியம் தேவரிசிக்குப்பம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை துணை தலைவர் திருமதி பிரமாவதி ரமேஷ்குமார் அவர்கள் முன்னிலையில் ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.இந்நிகழ்வின் போது ஊராட்சி செயலாளர் திரு. ஞானசேகரன் உள்ளார்

# நவ 16 ல் பேய்குளம் பாசனம் விவசாயிகள் ஆலோசனை கூட்டம்!



**தூத்துக்குடி,நவ.15**

எம்.சி. சண்முகையா எம்.எல்.ஏ. நேரடி ஆய்வுக்குப் பின் விவசாயிகள் உற்சாகம் – 16.11.2025 அன்று சேர்வைக்காரன்மடம் கிராம விவசாய அபிவிருத்தி சங்கம் பேய்குளம் பாசனம் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், சேர்வைக்காரன்மடம் கிராமம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக பாசன நீர்பாய்ச்சல் குறைபாடு மற்றும் போக்குவரத்து சிரமம் குறித்து விவசாயிகள் பலமுறை மனு அளித்து வந்தனர். குறிப்பாக மெயின் ரோட்டிலிருந்து திரவியபுரம் வரை வாய்க்கால் ஓரமாக புதிய சாலை அமைக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது.இந்த கோரிக்கையை சேர்வைக்காரன்மடம் கிராம விவசாய அபிவிருத்தி சங்கம் (ஸ்தாபிதம்: 1935, பதிவு எண்: S8/1951) சார்பாக ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. எம்.சி. சண்முகையா எம்.எல்.ஏ. அவர்களிடம் சமீபத்தில் மனு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சேர்வைக்காரன்மடம் கிராம விவசாய அபிவிருத்தி சங்கத்தின் தலைமையில், வருகிற நவம்பர் 16, 2025 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு சங்க அலுவலகத்தில் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் –புதிய சாலை அமைப்புக்கான அரசு சர்வே நடவடிக்கைகள்,வாய்க்காலின் அகலம் அளவிடல், ஆக்கிரமிப்பு அகற்றல் நடவடிக்கைகள்,விவசாயிகளின் ஒத்துழைப்புமற்றும்பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் குறித்து விரிவான ஆலோசனைகள் நடைபெறவுள்ளன.

### தமிழ்நாட்டில் சிறப்பு புற்றுநோய் பராமரிப்பு நிதி உருவாக்கம்:

# உயிர்காக்கும் சிகிச்சைகளுக்கான சமமான அணுகலை உறுதி செய்யும் முயற்சி!

**சென்னை, நவ.15**



தமிழ்நாட்டில் புற்றுநோய் நோயாளிகளுக்கு நவீன மற்றும் உயிர்காக்கும் சிகிச்சை முறைகளுக்கான அணுகலை மேம்படுத்த, "புற்றுநோய் பராமரிப்பு நிதி" உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. "ஒரு வலிமையான புற்றுநோய் பராமரிப்பு சூழலை உருவாக்குதல்" என்ற நோக்கத்துடன், FICCI தமிழ்நாடு கிளை மற்றும் எர்ன்ஸ்ட் & யங்க் இணைந்து நடத்திய உயர் மட்ட வட்டமேசை மாநாட்டில், அரசு, மருத்துவ நிபுணர்கள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

FICCI தமிழ்நாடு மாநிலக் கிளைத் தலைவர் டாக்டர் ஜி. எஸ். கே. வேலு கூறியதாவது, "தமிழ்நாடு பலனடிப்படையிலான புற்றுநோய் சிகிச்சையில் இந்தியாவை வழிநடத்தும் திறனை கொண்டுள்ளது. மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி டாக்டர் ஜே. கண்ணன் தெரிவித்ததாவது, "தற்போது அடிப்படை கீமோத்தெரபி மற்றும் சில மொனோகிளோனல் ஆன்டிபாடிகள் மட்டுமே கிடைக்கின்றன; புதிய சிகிச்சை முறைகளுக்கான அணுகலை விரிவுபடுத்த அரசு–தனியார் கூட்டாண்மை தேவை."

டாக்டர் டி. பாலாஜி, இயக்குநர், பிஎஸ்ஜி புற்றுநோயியல் நிறுவனம், கூறியதாவது, "நிதிச்சுமை நோயாளிகளுக்கு இரண்டாம் கட்ட நோயாக மாறுகிறது; இதைத் தடுப்பதற்காக மாநில அரசுகள் வலிமையான ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்."

# எஸ் ஐ ஆர் (SIR) வாக்காளர் சீர்திருத்தம் குறித்து திமுக கட்சி நிர்வாகிக்கு இடையே ஆலோசனை கூட்டம்!

**வாணியம்பாடி நவ.15**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் மேற்கு ஒன்றிய உட்பட்ட மதனாஞ்சேரியில் திமுக அலுவலகத்தில் எஸ் ஐ ஆர் (SIR) குறித்தான திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஞானவேலன் தலைமை தாங்கினார். அவைத்தலைவர் ராமநாதன், செயற்குழு உறுப்பினர் பெருமாள், பொதுக்குழு உறுப்பினர் அசோகன் துணைச் செயலாளர் குமார் பொருளாளர் தசரதன் முன்னிலை வகித்தனர்.



அப்போது பேசிய ஞானவேலன் திமுகவினர் எஸ் ஐ ஆர் வாக்காளர் படிவம் சீர்திருத்தம் குறித்து அனைத்து மக்களிடமும் சென்று இது குறித்தான முழுமையாக பூர்த்தி செய்து தருவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஏனென்றால் காங்கிரஸ் ராகுல் காந்தி அவர்கள் ஏற்கனவே இந்த எஸ் ஐ ஆர் சீர்திருத்தம் மூலமாக பீகார் மாநிலத்தில் 65 லட்சம் பேருடைய வாக்குகள் திருடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியிருந்தார் ஆகையால் தமிழகத்தில் வருகின்ற 2026 தேர்தல் நடைபெற உள்ள நிலையில் திமுக வாக்கு வங்கியை குறைக்கும் வகையில் பாஜக அரசு தேர்தல் ஆணையம் கூட்டு சதியோடு இத்தகைய செயல்களை செய்து வருவதாகவும் அதனால் திமுக நிர்வாகிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீட்டுக்காக சென்று படிவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா முறையாக செய்துள்ளார்கள் என்னும் கண்காணித்து அதனை பூர்த்தி செய்து அதனுடைய ஒப்புதல் சீட்டை பெற்று சம்பந்தப்பட்ட வாக்காளர்களுக்கு கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொண்டனர். இக்கூட்டத்தில் துணைச் செயலாளர் வெங்கடேசன் மாவட்ட பிரதிநிதி சிவா, ஓட்டுனர் அணி செல்வராஜ் பொறியாளர் நாகராஜ் மற்றும் மேற்கு ஒன்றிய கிளை நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

### சேல்ஸ்ஃபோர்ஸ் – 'யுவாAI பாரத்:

# ஜென்AI ஸ்கில் கேட்டலிஸ்ட்' திட்டத்தின் கீழ் 2026 க்குள் ஒரு லட்சம் பேருக்கு AI பயிற்சி!

**சென்னை , நவ.15**

உலகின் முன்னணி AI CRM நிறுவனமான சேல்ஸ்ஃபோர்ஸ், திறமையாளர் வளர்ப்பு மற்றும் கல்வித் தொழில்நுட்ப நிறுவனம் ஸ்மார்ட்பிரிட்ஜ் உடன் இணைந்து, இந்தியாAI இயக்கம் மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆதரவுடன், 'யுவாAI பாரத்: ஜென்AI ஸ்கில் கேட்டலிஸ்ட்' எனும் நாடு தழுவிய AI திறன் மேம்பாட்டு திட்டத்தை அறிவித்துள்ளது. இதன் மூலம் 2026 இறுதிக்குள் 1 லட்சம் பயிலுநர்களுக்கு ட்ரெயில்ஹெட் ஆன்லைன் தளத்தின் வழியாக உயர்தர AI பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.




ஸ்மார்ட்பிரிட்ஜ் தலைமையில் நடைபெறும் இந்த முயற்சி, எதிர்கால தொழில்துறைக்கு தேவையான AI திறன்களை வழங்கி, கல்வித் துறையும் தொழில் உலகமும் இடையேயான இடைவெளியை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

Tier 2 மற்றும் Tier 3 நகரங்களில் கவனம் செலுத்தி, பயிலுநர்கள் "Agentblazer Champion Level" சான்றிதழைப் பெற்று, தொழில் வாய்ப்புகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.

சேல்ஸ்ஃபோர்ஸ் தெற்காசிய தலைமைச்செயல் அதிகாரி அருந்ததி பட்டாச்சார்யா கூறியதாவது, "இந்தியா உலக AI மாற்றத்தில் முன்னணியில் நிற்கும் திறன் கொண்டது; இதற்குத் தேவையான திறன்களை நம் மக்களிடம் உருவாக்குவது முக்கியம்."

ஸ்மார்ட்பிரிட்ஜ் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி அமரேந்தர் கட்கம் தெரிவித்ததாவது, "சேல்ஸ்ஃபோர்ஸ் மற்றும் இந்தியாAI உடனான கூட்டணி, நாட்டின் இளைஞர்களுக்கு வேலைக்கு ஏற்ற AI திறன்களை வழங்கும்."

இந்தியாAI குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் COO திருமதி கவிதா பாட்டியா கூறியதாவது, "நமது இளைஞர்கள் தான் AI எதிர்காலத்தின் சக்தி; இந்த திட்டம் அவர்களின் திறனை வெளிக்கொணரும்."

### யூடியுப் பார்த்து பரதநாட்டியம்

# அரசு பள்ளி மாணவி மாவட்ட அளவில் தேர்வு!

**கொடைக்கானல்,நவ.15**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வில்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பி.எல்.செட் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயின்று வரும் பள்ளி மாணவி யாஸ்விதா பரதநாட்டிய தேர்வில் மாவட்ட அளவில் தேர்ச்சி பெற்றார். தமிழக அரசின் சார்பில் அரசு பள்ளிகளில் கலை திருவிழா நடத்தப்பட்டு வருகின்றன.



இதில் பரதநாட்டியம், கரகம், போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு மாணவ, மாணவியர்கள் பள்ளி, மாவட்ட மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு வருகின்றது.

இதில் பி.எல் செட் பகுதியை சேர்ந்த அர்ஜுன் வித்யா அவர்களின் மகள் யாஸ்விதா (5ஆம் வகுப்பு பள்ளி மாணவி) மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். பள்ளி மாணவியின் தாயார் யூடியுப் பார்த்து பரதம் கற்று தனது மகளுக்கும் பயிற்சி அளித்து வந்தார்.

மாவட்ட அளவில் கலந்து கொண்டு மாநில அளவில் சென்று வெற்றி பெறுவேன் என்று மாணவி யாஸ்விதா தெரிவித்தார். மாணவி யாஸ்விதா யூடியுப் பார்த்து பரதம் கற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் மாணவிக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர்ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ரா.வெங்கடேஷ்வரன், திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் (மகளிர் திட்டம்) செந்தில்வடிவு உட்பட பலர் உள்ளனர்.

### நாட்டையே உலுக்கிய டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவம்:

# முஸ்லிம் மக்கள் கழக நிறுவனர் ச.சு.ஜைனுதீன் கண்டனம்!





**திண்டிவனம் நவ.15**

டெல்லியில் நடைபெற்ற கார் குண்டு வெடிப்பு சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் குறித்து முஸ்லிம் மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் ச.சு. ஜைனுதீன் அவர்கள் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில்,

டெல்லி கார் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சம்பவத்திற்குப் பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா உடனடியாக பதவி விலக வேண்டும், என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது:

நாட்டையும் நாட்டு மக்களையும் காக்கும் உண்மையான முஸ்லிம், எந்த விதத்திலும் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்க மாட்டான். இப்படியான அசுரச் செயல்கள்நாட்டின்அமைதியையும் ஒற்றுமையையும் சிதைக்க முயலும் தீய நபர்களின் செயல். இது போன்ற சம்பவங்கள் இனி நடக்காமல் இருப்பதற்காக மத்திய அரசு உளவுத்துறையின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

இந்தியாவின் ஒற்றுமை, சமாதானம், மனிதநேயம் ஆகியவற்றை அழிக்க முயலும் சக்திகளை வேரோடு ஒழிக்க அரசாங்கம் விழிப்புடன் செயல்பட வேண்டும். உயிரிழப்புக்குக் காரணமானவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுத்து, நீதியும் நியாயமும் நிலை நாட்டப்பட வேண்டும்.அவர் மேலும் கூறியதாவது, குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறோம். காயமடைந்தோர் விரைவில் நலம் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்," எனவும் முனைவர் ச.சு.ஜைனுதீன் தெரிவித்துள்ளார்.

# பழுதடைந்த நீர்த்தேக்கத் தொட்டி அகற்ற நிர்வாகம் அறிக்கை!

**தூத்துக்குடி,நவ.15**

பழுதடைந்த 1968 நீர்த்தேக்கத் தொட்டி அகற்ற நிர்வாகம் அறிக்கை வெளியிடப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், சேர்வைக்காரன்மடம் ஊராட்சிக்குட்பட்ட செந்தியம்பலம் கிராமத்தில், 1968ல் கட்டப்பட்ட பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி காரணமாக கிராம மக்கள் கடந்த பத்து ஆண்டுகளாக கடுமையான குடிநீர் சிக்கலை சந்தித்து வந்தனர்.

சுமார் 500 நெசவாள குடும்ப ங்கள் பாழடைந்த நீரைக் பயன்படுத்திக் கொண்டு பலருக்கு உடல் நலக் குறைபாடுகள் ஏற்பட்டன. 2023 ஆம் ஆண்டு வட்டார வளர்ச்சி அலுவலர் கடிதம் (A2/3683/2023) மூலம் பழுதடைந்த தொட்டியை இடிக்க பரிந்துரை அனுப்பப்பட்டது. 2024 ஆம் ஆண்டு திரும்ப மனு அளித்த போதும் அதே பதிலை நிர்வாகம் வழங்கியது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா செந்தியம்பலத்திற்கு கள ஆய்வுக்கு வந்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு உறுதி செய்தார்.

கடைசியாக 10/11/2025 அன்று ஏஞ்சலின் ஜெனிட்டா ஊராட்சி உயர் அதிகாரிகள் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் மனு அளித்தார். அதன் பதிலில் தூத்துக்குடி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி ஆ. சாந்தி தெரிவித்ததாவது '

"03/11/2025 அன்று ஊராட்சி ஒன்றிய பொது நிதி மூலம் ஒப்பந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதால், இரண்டு நாட்களுக்குள் பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அகற்றப்படும்."

கடந்த 10 வருடமாக பாழடைந்த நிலையில் இருந்த செந்தியம்பலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை சுமார் 9 இலட்சம் செலவில் சீரமைக்கபடும் என்று பொதுப்பணித்துறையால் அறிவிக்கப்பட்ட போது அதனை எதிர்த்து பாழடைந்து 10 வருடமாக மூடி உள்ளதை மறு ஆய்வு செய்யவேண்டும் என வலியுறுத்து தொடர் வலியுறுத்தி 15 வருடமாக அமைக்க படாமல் இருந்ததை சுட்டி காண்பித்து முதலமைச்சர் சாலை திட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டது.

# தூத்துக்குடி மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை!

**தூத்துக்குடி,நவ.15**

கடல் பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் தூத்துக்குடி மீனவர்கள் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்ட கடலோர பகுதிகளில் வலுவான மழை மேகங்கள் உருவாகியுள்ளது.எனவே, தூத்துக்குடி மாவட்டத்தில் உ'ள்ள அனைத்து வகையான மீன்பிடி படகுகளும் உடனடியாக கரை திரும்பிட அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அதில் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.



பந்தலூர் அருகே பாக்கனா ஜி எம் எஸ் உயர்நிலைப் பள்ளியில்சமூக நீதி, மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ரூபாய் 16.95 கோடி மதிப்பிலான பூஞ்சோலை மாதிரி அரசினர் கூர்நோக்கு இல்ல கட்டுமான பணிகள் தொடக்க விழா காளப்பட்டி பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன் குமார் கிரியப்பனவர் துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், கிழக்கு மண்டல தலைவர் லட்சுமி இளஞ்செல்வி கார்த்திக், பொறியாளர்கள் கார்த்திகேயன் மற்றும் செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்காதல் விவகாரம்:

## தட்டிக் கேட்ட கணவனை வீடு புகுந்து மனைவி, பிள்ளைகள் கண் முன்னே வெட்டிய கள்ளக்காதலன்!



வாணியம்பாடி நவ.15

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மில்லத் நகர் பகுதியை சேர்ந்தவர் அப்புன்ராஜ், இவரது மனைவி ஜீவா.

இவர்களுக்கு 7 வயதில் ஒரு மகள், மற்றும் 2 வயதில் ஒரு மகன், என இரு குழந்தைகள் உள்ள நிலையில், ஜீவா திருமணத்தை மீறி பிரேம்குமார் என்ற வாலிபருடன் உறவில் இருந்து உள்ளார்.

இதனை அறிந்த ஜீவாவின் கணவர் அப்பன் ராஜ் சில மாதங்களுக்கு முன்பு பிரேம்குமாரை கண்டித்ததாக கூறப்படுகிறது.

இதனால் ஜீவா பிரேம்குமார் உடனான உறவை துண்டித்ததாகவும் இதனால் ஆத்திரமடைந்த பிரேம்குமார் நேற்று நள்ளிரவு அப்புன்ராஜ் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டின் பின்பக்க சுவர் ஏறி குதித்து உள்ளே

சென்ற பிரேம்குமார் அப்புன் ராஜிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பின்னர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அப்புன் ராஜை சரமாரியாக தாக்கி உள்ளார் .

இதில் தலை உள்ளிட்ட ஐந்து இடங்களில் வெட்டு காயம் ஏற்பட்டு அப்புன் ராஜ் உயிருக்கு போராடினார்.

இவருடைய அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் வருவதை அறிந்து பிரேம்குமார் அங்கிருந்து தப்பித்தார். இதனை தொடர்ந்து அக்கம்பக்கத்தினர் படுகாயம் அடைந்த அப்புன் ராஜ்ஜை சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற கிராமிய போலீசார் தப்பிஓடியபிரேம்குமாரை தேடி வருகின்றனர்.

கள்ளக்காதல் விவகாரத்தில் மனைவி மற்றும் பிள்ளைகள் கண் முன்னே கணவன் தாக்கப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## சந்தூர் அருகே காணாமல் போன பின் 3 நாட்களுக்குப் பின் கிணற்றில் சடலமாக மீட்பு!

கிருஷ்ணகிரி,நவ.15

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த சந்தூர் பகுதியில் திருப்பத்தூர் மாவட்டம் அண்ணா நகர் பகுதியை சேர்ந்த வேலு 55 மனைவி லட்சுமி 49இவர்களுக்கு சூர்யா 26 சுபாஷ் 23 இரண்டுஆண்கள் இரண்டு பெண்கள் இவர் குடும்பத்துடன் சந்தூரில் வாடகை வீடு எடுத்து தங்கி வருகின்றனர். இவருடைய பிள்ளைகள் தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வருகின்ற நிலையில் லட்சுமி மூன்று நாட்களுக்கு முன்பு வீட்டிலிருந்து



சென்ற அவர் வீடு திரும்பவில்லை. இவரை பல இடங்களில் குடும்பத்தார் தேடிய நிலையில் இன்று சந்தூர் அடுத்த முருகர் கோவில் பின்புறம் உள்ள விவசாய கிணற்றில் சடலம் இருப்பது தெரியவந்தது அதனை உறவினர்கள் சென்று பார்த்த பொழுது லட்சுமி என்பது உறுதியானது இது குறித்து தகவல் அறிந்து வந்த போச்சம்பள்ளி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் மேலும் போச்சம்பள்ளி தீயணைப்பு துறை அதிகாரிகள் உதவியுடன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

### அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய

## மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் சண்முகநாதன் பாராட்டு!

புதுக்கோட்டை,நவ.14 _

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலினுக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் சண்முகநாத ன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியு ள்ளதாவது:.மத்திய அரசுக்கு இணையாக மூன்று சதவீத அகவிலைப்படி உயர்வினை ஜூலை 1ஆம் தேதி முதல் வழ ங்கப்படும் என்ற அறிவிப்பு தமிழ்நாட்டின்16 லட்சம் அலுவ லர்கள், ஆசிரியர்கள, ஓய்வூதியதாரர்கள் வாழ்வில் மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பாகும்.

தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த ஆசிரியர்களுக்



காக தன் வாழ் நாளில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கியசொன்னதைச் செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற முத்தமிழ் அறிஞ ர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதையில் வந்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸடாலின் அவர்கள் ஆசிரியர் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவே ற்றுவார் என்ற பெரும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழக அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் என்று ஏற்கனவே கூறியதைப் போன்று தற்போது 55 சதவீதமாக இருந்த அகவிலைப்படியை 1.7.2025முதல் 58 சதவீதமாக உயர்த்தி உத்தரவு வெளியிட்ட தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் தமிழக முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்களும் தனது தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றிட வேண்டும் என தனது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## ChatGPT ஐ கொண்டு சேர்க்க OpenAI உடன் ஒரு வியூக ரீதியான கூட்டணியை அறிவித்த PhonePe!

சென்னை,நவ.15

PhonePe மற்றும் OpenAI இன்று இந்தியாவில் ChatGPT பயன்பாட்டை விரைவாக விரிவாக்கவும், பரஸ்பர வணிக வளர்ச்சியை ஊக்குவிக்கவும் வியூக ரீதியான கூட்டாண்மையை அறிவித்துள்ளன. இந்த ஒத்துழைப்பின் மூலம், PhonePe பயனர்கள் தங்களின் அன்றாட தேவைகளுக்கான புத்திசாலித்தனமான தீர்வுகளை PhonePe தளத்திலேயே ChatGPT வழியாகப் பெற முடியும் — பயணத் திட்டமிடல் முதல் ஷாப்பிங் வரை மேம்பட்ட AI அனுபவத்தை இந்திய மக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன்.

இந்த கூட்டாண்மை PhonePe நுகர்வோர் மற்றும் வணிக செயலிகள் இரண்டிலும் ChatGPT ஒருங்கிணைப்பை கொண்டுவரும், மேலும் Indus ஆப்ஸ்டோர் உள்ளிட்ட PhonePe அமைப்பின் முழு டிஜிட்டல் சூழலைப் பயன்படுத்தும். PhonePe நிறுவனர் மற்றும் CTO ராகுல் சாரி, "OpenAI உடன் இணைந்து நாங்கள் இந்தியாவில்அதிநவீனதொழில் நுட்பத்தை மக்களிடம் கொண்டு செல்லும் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறோம்" என்று கூறினார்.

OpenAI இன்சர்வதேசபிரிவுத் தலைவர் ஆலிவர் ஜெய், "இந்த ஒத்துழைப்பு இந்திய மக்களுக்கு AI ஐ எளிதாகக் கொண்டு செல்லும் ஒரு முக்கிய மைல்கல்லாகும்" என்றார். 2016 இல் தொடங்கப்பட்ட PhonePe, தற்போது 61 கோடி பதிவு செய்யப்பட்ட பயனர்கள் மற்றும் 4.4 கோடி வணிகர்களை கொண்ட இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் பேமண்ட்ஸ் தளமாகும். அதன் முக்கிய சேவைகளில் நுகர்வோர் மற்றும் வணிகர் பேமண்ட்ஸ், கடன் மற்றும் காப்பீட்டு விநியோகம், Share.Market, Pincode, மற்றும் Indus Appstore போன்ற புதிய தளங்களும் அடங்கும்.

## ஹாக்கி உலகக்கோப்பையை கனிமொழி எம்.பி அறிமுகம் செய்தார்!

கோவில்பட்டி, நவ.15

கோவில்பட்டியில் 14ஆவது ஆடவர் இளையோர் ஹாக்கி உலகக் கோப்பையின் கோப்பையை கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிமுகம் செய்து வைத்தார்

இந்தியா, அர்ஜென்டினா, சீனா, நியூசிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட 24 நாடுகள் கலந்து கொள்ளும் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பைப் போட்டிகள் நவம்பர் 28ஆம் தேதி முதல் டிசம்பர் 10ஆம் தேதி வரை தமிழகத்தில் சென்னை மற்றும் மதுரையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் சர்வதேச ஹாக்கி சம்மேளனம் இணைந்து நடைபெற உள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கான உலகக்கோப்பையை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்தும் நோக்கில் வாகனப் பேரணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், இன்று (13/11/2025) தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் உள்ள செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, 14ஆவது ஆடவர் ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பையை அறிமுகம் செய்து வைத்தார்.

நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்கண்டேயன், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி S. அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி நகரமன்ற தலைவர் கா.கருணாநிதி, ஹாக்கி வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கஞ்சா, கள்ளச்சாராயம் விற்றால் கடும் நடவடிக்கை; எஸ்பி சியாமளா தேவி எச்சரிக்கை!



திருப்பத்தூர் நவ.15

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சி அண்ணா நகர் பகுதியில் உள்ள மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் மாதாந்திர குற்ற கலந்தாய்வு கூட்டம் எஸ்பி சியாமளா தேவி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் எஸ்பி பேசுகையில் . மாவட்டத்தில் கஞ்சா மற்றும் கள்ளச்சாராயம் விற்பனையை முற்றிலுமாக தடுக்க வேண்டும். கஞ்சா மற்றும் கள்ளச்சாராயம் விற்பனை செய்யும் நபர்களை கைது செய்து குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் மேலும் காவல் நிலையங்களில் மற்றும் அலுவலகங்களில் எவ்வாறு கோப்புகளை பராமரிக்க வேண்டும், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு சம்பந்தமாக பல்வேறு ஆலோசனைகளை காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கினார். இந்த கூட்டத்தில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## திருப்பத்தூர் காவலர் குடியிருப்பு பகுதியில் தோழிகள் விடுதி; அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பூமி பூஜை!

திருப்பத்தூர் நவ.15

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் காவலர் குடியிருப்பு பகுதியில் தோழிகள் விடுதி அமைக்கும் பணிக்கு, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.சிவசௌந்தரவல்லி தலைமை வகித்தார். காவலர் குடியிருப்பு பகுதியில்சமூகநலத்துறை சார்பில் ரூ. 5.64 கோடி மதிப்பீட்டில், புதிய தோழிகள் விடுதி அமைக்கும் பணிக்கு, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி பூமிபூஜைசெய்துபணியை துவக்கி வைத்தார்.

திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேஷ் முன்னிலையில் நடைபெற்ற, இந்த நிகழ்ச்சியில், நகர மன்ற உறுப்பினர்அசோக்குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொது மக்கள், நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

### டவ் ‘ரீகிளைம் யுவர் கர்ல்ஸ்’ பிரச்சாரம்:

## டாப்ஸி பண்ணு உடன் சுருள் கூந்தல் பெருமையை கொண்டாடும் இயக்கம்!

சென்னை, நவ.15

உண்மையான அழகை மீளவரையறுக்கும்முயற்சியில் முன்னணி பிராண்ட் Dove, தனது புதிய ‘ரீகிளைம் யுவர் கர்ல்ஸ்’ பிரச்சாரத்தை நடிகை டாப்ஸி பண்ணு முன்னிறுத்தி அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியா முழுவதும் சுருள் கூந்தல் கொண்ட பெண்களின் அழகு, வலிமை மற்றும் தனித்தன்மையை கொண்டாடும் இப்பிரச்சாரம், பெண்கள் தங்கள் இயல்பான கூந்தலை பெருமையுடன் அணிய ஊக்குவிக்கிறது.




இப்பிரச்சாரத்தின் மையமாக உருவாக்கப்பட்ட விளம்பர படத்தில், டாப்ஸி பண்ணு தனித்தன்மை, தன்னம்பிக்கை மற்றும் பழைய அழகுக்கோட்பாடுகளை மீறி தன்னைத்தான் ஏற்றுக்கொள்வது பற்றிப் பேசுகிறார். "சுருள் கூந்தலுக்கு தனக்கென ஒரு தனித்தன்மை உண்டு; அவற்றை நீங்கள் கொண்டாட கற்றுக் கொண்டால், அவை உங்கள் வலிமையாக மாறும்," என அவர் கூறினார்.

யூனிலீவர் ஹேர் கேர் பிரிவு துணைத் தலைவர் சாய்ராம் சுப்பிரமணியன் கூறுகையில், "அழகு என்பதுகட்டுப்படுத்தஅல்ல, வலிமை அளிக்க வேண்டிய ஒன்று. இந்தப் பிரச்சாரத்தின் மூலம் சுருள் கூந்தலுக்கு அரிய அன்பையும் அங்கீகாரத்தையும் வழங்க விரும்புகிறேன்," என்றார்.

டிஜிட்டல் தளங்கள் வழியாக இந்தியா முழுவதும் பெண்கள் தங்கள் சுருள் கூந்தல் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள Dove அழைக்கிறது.

### ஐசிஎல் ஃபின்கார்ப் புதிய NCD வெளியீடு:

## நவம்பர் 17 முதல் — அதிகபட்சம் 12.62% வருமானம் வழங்குகிறது!

சென்னை, நவ.15

ஐசிஎல் ஃபின்கார்ப் நிறுவனம் தனது புதிய பாதுகாப்பான, திருப்பிச் செலுத்தக்கூடிய, மாற்றமுடியாத கடன் பத்திரங்கள் (Secured Redeemable NonConvertible Debentures – NCDs) பொது வெளியீட்டை அறிவித்துள்ளது. இந்த வெளியீடு நவம்பர் 17, 2025 அன்று தொடங்கி நவம்பர் 28, 2025 வரை திறந்திருக்கும். ₹1,000 முகவிலையுடன் வெளியிடப்படும் இந்த பத்திரங்கள் 10.50% முதல் 12.62% வரை வட்டி வழங்குகின்றன. CRISIL BBB/Stable என மதிப்பிடப்பட்டுள்ள இவ் வெளியீடு, முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான முதலீட்டு வாய்ப்பாகும்.

34 ஆண்டுகளாக நம்பகமான நிதி கூட்டாளியாக விளங்கி வரும் ஐசிஎல் ஃபின்கார்ப், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அட்வ. கே.ஜி. அனில்குமார்



அவர்களின் தலைமையில், நாடு முழுவதும் தன் சேவைகளை விரிவுபடுத்தி வருகிறது. சமீபத்தில் 93 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் BSEபதிவு செய்யப்பட்ட NBFC நிறுவனமான சேலம் ஈரோடு இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்தை கைப்பற்றியதன் மூலம், நிறுவனம் நிதி துறையில் தனது நிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இந்த புதிய வெளியீட்டை அறிவித்துள்ள ஐசிஎல் ஃபின்கார்ப் முழுநேர இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான திருமதி உமா தேவி அனில்குமார் கூறுகையில், "இந்த NCD வெளியீடு, முதலீட்டாளர்களுக்கு நிலையான வருமானத்தையும் பாதுகாப்பையும் வழங்குவதோடு, நிறுவனத்தின் வளர்ச்சி இலக்குகளுக்கு வலுவான ஆதாரமாக இருக்கும்," என தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் என். அரவிந்த் பாபு தனது தந்தை பேராசிரியர் எஸ்.நடராஜன் அவர்களின் நினைவாக 50 நாற்காலிகளை விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரியின் முதல்வர் டாக்டர் டி.ஜெயசிங் அவர்களிடம் வழங்கினார்.. இந்த நிகழ்ச்சியில் துணை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் என்.அன்புவேல், நிலைய மருத்துவ அதிகாரி டாக்டர் எஸ். வைஷ்ணவி மற்றும் உதவி நிலைய மருத்துவ அதிகாரி டாக்டர் வரதீஸ்வரி ஆகியோர் பங்கேற்றனர்.இந்த நாற்காலிகள் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு பயன்படும் நோக்கத்துடன் வழங்கப்பட்டது.



விழுப்புரம் மாவட்டம் 76 திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் வட்டம், பல்லிப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்செயலியில்(BLOAPP)உள்ளீடுசெய்யும்பணியினைமாவட்டதேர்தல்அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன்திருக்கோவிலூர்சார்ஆட்சியர்ஆனந்த்குமார்சிங்,திருவெண்ணெய்நல்லூர் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் ரகுராம் உட்பட பலர் உள்ளனர்.

## தருமபுரி மற்றும் பாலக்கோடு, சுற்றுவட்டார மற்றும் பகுதிகளில் தக்காளி செடியில் வைரஸ் நோய் தாக்குதல்; விவசாயிகள் வேதனை!



தருமபுரி,நவ.15

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு மற்றும் கம்பைநல்லூர் சுற்றுவட்டார பகுதியில் சுமார் 700க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் வருடம் முழுவதும் தக்காளி சாகுபடி செய்து வருகின்றனர்.

இங்கு உள்ள தக்காளி மார்கெட்டிலிருந்து உள்ளூர் தேவை போக சேலம், திண்டுக்கல், கோவைமதுரை, சென்னை உள்ளிட்ட வெளிமாவட்ட மற்றும் வெளிமாநிலங்களுக்கு தக்காளி ஏற்றுமதி செய்து வருகின்றனர். தற்போது பல தனியார் நிறுவனங்கள் தரமில்லாத தக்காளி விதைகள் விற்பனை செய்வதால் தனியார் தக்காளி நாற்றுப் பண்ணைகள் மூலம் விவசாயிகள் ஒரு நாற்று 1.50ரூபாய்க்கு வாங்கி நடவு செய்யப்பட்டு இருந்த நிலையில் கம்பைநல்லூர், கொங்காரப்பட்டி, காடுசெட்டிபட்டி, பஞ்சப்பள்ளி, சூடானூர், மாரண்டஹள்ளி, உள்ளிட்ட கிராமத்தில் தக்காளி செடிகளில் வைரஸ் நோய் தாக்குதலால் புள்ளி அழுகல் நோய், ஊசிப் புள்ளி நோய், தண்டு இலைகள் நோய் மற்றும் பழங்களில் கோடுகள் உள்ளிட்டவை பாதிப்பால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு ஏக்கர் விளைவிக்க 1 லட்சம் ரூபாய் வரை செலவிட வேண்டியுள்ளதாகவும் பயிர்களில் வைரஸ் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு சவால்களை விவசாயிகள் சந்திக்கும் நிலையில் கிலோ தக்காளி 10ரூபாய் முதல் 20 ரூபாய் வரையிலே விற்பனை செய்வதால் விவசாயிகள் விரக்தி அடைந்து தற்போது சாலை ஓரங்களில் கொட்டி வருகின்றனர். தக்காளி செடியில் வைரஸ் நோய் தாக்குதலை குறைக்க தமிழக அரசு வேளாண் துறை மூலம் தரமான விதை விற்பனை செய்தால், இது போன்ற வைரஸ் நோய் தாக்குதலில் இருந்து செடிகள் பாதிப்படைவது குறைந்து , விளைச்சல் அதிகரித்து விவசாயிகள் பாதிக்கப்படுவது குறையும் என இப்பகுதி தக்காளி விவசாயிகள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளனர்.

## கோவை பத்திரிக்கையாளர் சந்திப்பில் அண்ணாமலை ஆவேசம்!



கோவை,நவ.15

கோவையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அண்ணாமலை, "இயற்கை விவசாய மாநாட்டில் பங்கேற்பதற்காக வரும் 19 ஆம் தேதி பிரதமர் மோடி கோவை வருகிறார். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதில் என்ன தவறு? என்னுடைய வாழ்க்கையை நான் வாழ்கிறேன். நான் தொழில் செய்கிறேன். நான்யாரையும்மிரட்டி பணம் பறிக்கவில்லை. என்னுடைய தொழில் நான் செய்கிறேன். நான் அரசியல் செய்கிறேன். இதில் எதை நீங்கள் தவறாக பார்க்கிறீர்கள்? நான் எங்கிருந்து சாப்பிடுவேன். எனது குழந்தைகளுக்கு எப்படி ஃபீஸ் கட்டுவேன்? எதை செய்ய வேண்டுமானாலும் நியாயமான முறையில் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். நான் எந்த தொழிலும் செய்யக்கூடாது என்று சொல்வதற்கு இங்கு யாருக்கு உரிமை இருக்கிறது? நான் செய்யக்கூடிய தொழிலில்யாருக்குபாதிப்பு இருக்கிறது. எந்த தொழிலை ஆரம்பிப்பதற்கும் எனக்கு உரிமை இருக்கிறது. கட்சியில் மாநில தலைவராக நான் இல்லை. ஓடுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. என்னுடைய வேலையை செய்வதற்கு எனக்கு நேரம் இருக்கிறது. விவசாயம் செய்வதற்கு நேரம் இருக்கிறது. நான் செய்வதில் என்ன தவறு இருக்கிறது என்று சொல்லுங்கள். இன்னும் பல தொழில்கள் ஆரம்பிக்க தான் போகிறேன் என்றார். 24 மணி நேரத்தை கைக்கடிகாரம் கட்டிக்கொண்டு ஓடி வேலை செய்கிறேன். நீங்களும் அதை செய்யுங்கள் என்று சொல்கிறேன்.

சோம்பேறியாக வீட்டில் இருக்காதீர்கள். நீங்களும் பல இடத்திற்கு செல்லுங்கள். வெளிநாட்டில் சென்று டெக்னிக் கற்றுக்கொண்டு இந்தியாவில் செயல்படுத்துங்கள். . ரயிலில் டிக்கெட் எடுக்காமல் வந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு ஏழு தலைமுறைக்கு சொத்து சேர்த்து வைத்துள்ளனர். முதல்வர் ஸ்டாலின் இன்றைக்கு என்ன தொழில் செய்கிறார்? பணம் அவருக்கு எங்கிருந்து வருகிறது. ஒரு பக்கம் கஞ்சா புழக்கம் அதிகரித்துள்ளது. கவனம் கொடுக்க வேண்டும். சிறப்பான அதிகாரிகளை பணி செய்ய வைக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் கண்காணிக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்டமன்ற தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், கொக்கம்பாளையம் ஊராட்சி, மேட்டுக்கடை பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் மூலம் ரூ. 8.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், உடன் குண்டடம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.சந்திரசேகரன், துறை சார்ந்த அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள்,திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை அருகே தரை இறக்கப்பட்ட சிறிய ரக பயிற்சி விமானம்:

# முன்பக்க இறக்கை மற்றும் பாகங்கள் சேதமடைந்து கீழே விழுந்தது; சாதுரியமாக விமானத்தை விமானி தரை இறக்கியதால் விபத்து தவிப்பு!



புதுக்கோட்டை,நவ.15

புதுக்கோட்டைஅருகே நார்த்தாமலை அம்மாசத்தி ரத்தில் திருச்சிகாரைக்குடி தேசிய நெடுஞ்சாலை யில் தொழில்நுட்பக் கோளாறால் தரை இறக்கப்பட் ட சிறிய ரக பயிற்சி விமானம், விமானத்தின் முன்பக்க இறக்கை மற்றும் பாகங்கள் சேதமடைந்து கீழே விழுந்த நிலையில் சாதுரியமாக விமானத்தை விமானி தரை இறக்கியதால் பெரும் விபத்து தவிப்பு.

தரையிறக்கப்பட்ட விமானத்தை திருச்சி விமான நிலைய இயக்குனர் ராஜ்குமார் தலைமையிலான குழுவினர் மற்றும் தமிழ்நாடு இயற்கை வளங்கள்துறை அமைச்சர் ரகுபதி ஆகியோர் நேரில் பார் வையிட்டு ஆய்வு செய்தார்.

சேலம் மாவட்டத்தில் உள்ள Ekvi air training organisation pvt ltd என்ற தனியார் விமான பயிற்சி மையத்திலி ருந்து செஸ்னா என்ற சிறிய ரக பயிற்சி விமானம் சேலத்தில் இருந்து காரைக்குடிக்கு வான் வழியாக சென்று விட்டு பின்னர் வான்வழியாகபுதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை பகுதியில் வந்த போது சிறியரக விமானத்தின் முன்பக்க இறக்கை மற்றும் பாகங்கள் சேதமடைந்து கீழே விழுந்ததால் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் விமான பயிற்சியாளர் ராகுல் மற்றும் விமான பயிற்சி மாணவன் ஹாசிர் ஆகிய இருவர் இருந்த நிலையில் விமானத்தில் தொழில் நுட்ப கோளாறு ஏற்பட்டதை அறிந்த விமானி ராகு ல் உடனடியாக பயிற்சி விமானத்தை அம்மாசத்திரம்கிராமத்தில் திருச்சி காரைக்குடி நெடுஞ்சாலை யில் வாகனங்கள் எதுவும் வராத நேரத்தில் சாதுரி யமாக தரையிறக்கி உள்ளார்.

விமானி சாதுரியமாக செயல்பட்டு சாலையில் வி மானத்தை தரஇறக்கிய தால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

விமானம் திடீரென்று தரையில் இறங்கியதை பார்த்த அப்பகுதியினர் மற்றும் வாகன ஓட்டிகள் உடனடியாக தரை இறக்கப்பட்ட விமானத்திற்கு சென் று விமானத்தில் உள்ளவர்கள் நலமாக இருக்கிறார்களா என்பதை பார்வையிட்டு பின்னர் உடனடி யாக சாலையின் நடுவே இருந்த விமானத்தை 150 அடி தூரம் தள்ளி சென்று சாலையின் ஓரம் நிறுத்த உதவி செய்தனர். மேலும் இந்த விமானத்தில்பயணித்தவிமானி உள்ளிட்ட இருவரும் எந்த வித காயமும் இன்றி உயிர்த்தப்பினர்.

பின்னர்சிறியரக பயிற்சி விமானத்தில் இருந்து சேதமடைந்து விழுந்த பாகங்களை நார்த்தாமலை அருகே உள்ள மஸ்தான் கூடம் என்ற பகுதியில் இருந்து சேகரித்து வந்து விமானம் அருகே வைத்த நிலையில் தரை இறக்கப்பட்ட விமானத்தில் எரிவாயு கசிவு இருந்ததால் உடனடியாக சம்பவ இடத்திற்கு தீயணைப்பு துறையினர் வரவழைக்கப்பட்டனர். பின்னர் காவல்துறையினரும் சம்பவ இடத்திற்கு வந்த நிலையில் அப்பகுதியில் நூற்றுக்கணக்கானோர் குவிந்ததால் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

மேலும் தொடர்ந்து அந்த பகுதியில் பொதுமக்கள் குவிந்து வருவதால் காவல்துறையினர்தற்பொழுது தடுப்புகள் அமைத்து விமான இருக்கும் பகுதியை பொதுமக்கள் நெருங்காமல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

## தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி 104–வது நிறுவனர் தினவிழா!

தூத்துக்குடி,நவ.15

தூத்துக்குடியில் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியின் 104வது நிறுவனர் தினவிழா நடைபெற்றது. விழாவில் பல்வேறு பயனாளிகளுக்கு ரூ.128.15 கோடி மதிப்பில் கடன் உதவிகள் வழங்கப்பட்டது.

தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியின் 104வது நிறுவனர் தினவிழா ஏவிஎம் கமலாவேல் மஹாலில் நடைபெற்றது. விழாவிற்கு வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி




சலீ எஸ். நாயர் தலைமை வகித்து, 200க்கும் மேற்பட்ட ஆன்லைன் சேவைகளை வழங்கும் டிஜிட்டல் என்கேஜ்மென்ட் ஹப் (DEH) போன்றபுதியதிட்டங்களை தொடங்கி வைத்தார்.

விழாவில் பேசிய வங்கியின் செயல் இயக்குநர் வின்சென்ட், வங்கி ₹1 லட்சம் கோடி மொத்த வணிக இலக்கைக் கடந்ததை அறிவித்துள்ளார். முன்னாள் இயக்குநர் சி.எஸ். ராஜேந்திரன், வங்கியின் 100 ஆண்டுகளுக்கும் மேலான லாபத்தன்மை மற்றும் நேர்மையான மதிப்புகளைப் பாராட்டி பேசினார். தலைமை விருந்தினராக "இந்தியாவின் நிலவு மனிதன்" என்று அழைக்கப்படும் இஸ்ரோவின் முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ டாக்டர். மயில்சாமி அண்ணாதுரை கலந்துகொண்டார். சுயேச்சை இயக்குனர் (பகுதி நேர தலைவர்), கே. ராமச்சந்திரன், வங்கியின் ஸ்திரத்தன்மை மற்றும் கவனமான வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டினார். வங்கியின் குறிக்கோள் அனைவருக்கும் அணுகக்கூடியதாகவும், மலிவு விலையில் சேவைகளை வழங்குவதாகவும்குறிப்பிட்டார்.வங்கிபாதுகாப்பானது என்றும், அதன் வளர்ச்சி சீராகவும் வெளிப்படையானதாகவும் இருப்பதை உறுதிப்படுத்தினார்.

## 28வது ஜேகே டயர் எப்எம்எஸ்சிஐ தேசிய பந்தய சாம்பியன்ஷிப் 2025 இறுதிப்போட்டி!

### கோவையில் இன்று, நாளை நடக்கிறது!!



கோவை, நவ.15

இந்தியாவின் பிரபல கார் பந்தய சாம்பியன் ஷிப் போட்டியான ஜேகே டயர் எப்எம்எஸ் சிஐ தேசிய பந்தய சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிகள், வரும் 15 மற்றும் 16ந்தேதிகளில் கோவையில் உள்ள காரி மோட்டார் ஸ்பீட்வேயில் நடைபெற உள்ளது. பல மாதங்களாக நடைபெற்ற இந்த பந்தயத்தின் இறுதிப் போட்டிகளில் பல அற்புதங்களையும் சுவாரஸ்யங்களையும் ரசிகர்கள் எதிர்பார்க்கலாம். மேலும் ரசிகர்களின் உற்சாகத்தை அதிகரிக்கும் விதமாக, அமெரிக்க பந்தய ஜாம்பவான் மற்றும் மூன்று முறை மோட்டோஜிபி உலக சாம்பியனும், மோட்டோஜிபி ஹால் ஆப் பேமில் இடம்பெற்றவருமான ப்ரெடி ஸ்பென்சரும் கலந்து கொள்ள இருக்கிறார்.முதல் முறையாக போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கான போட்டிகள் முதல் சாம்பியன்ஷிப் பட்டத்திற்காக போராடும் அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் வரை, இறுதிப் போட்டி அனைத்துப் பிரிவுகளிலும் இருக்கையின் நுனிக்கு கொண்டு செல்வதற்கு உறுதி அளிக்கிறது. இறுதிப் போட்டி எல்ஜிபி பார்முலா 4, ஜேகே டயர் நோவிஸ் கோப்பை, ராயல் என்பீல்ட் கான்டினென்டல் ஜிடி கோப்பை மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஜேகே டயர் லெவிடாஸ் கோப்பை ஆகிய பிரிவுகளில் நடைபெற உள்ளது. மேலும், இந்திய பந்தய விழா 2025ன் ஒரு பகுதியாக, எப்ஐஏசான்றளிக்கப்பட்ட பார்முலா 4 இந்திய சாம்பியன்ஷிப்பின் இறுதிக்கு முந்தைய போட்டியும் நடைபெற உள்ளது.ஜேகே டயர் தேசிய பந்தய சாம்பியன்ஷிப்பில் இந்தியாவில் மிகவும் பிரபலமான ஒற்றை இருக்கை கொண்ட எல்ஜிபி பார்முலா 4, மிக நீண்ட காலமாக நடைபெற்று வரும் போட்டியாகும். இதுகார்ட்டிங்மற்றும்பார்முலாபந்தயத்திற்குஇடையே பாலமாக இருந்து வருகிறது.



கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் முதற்கட்டமாக சுமார் 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.167.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் செம்மொழிப்பூங்கா கட்டுமானப்பணிகளை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் , நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி துணை ஆணையாளர் த.குமரேசன், தலைமைப் பொறியாளர் விஜயகுமார், உதவி ஆணையர்கள் மகேஷ்கனகராஜ், செல்வி.நித்யா, துணை மாநகரப்பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் கருப்பசாமி, உதவி செயற்பொறியாளர் குமரேசன், உதவி பொறியாளர்கள் கமலக்கண்ணன், குமார், சரவணக்குமார், சபரிராஜ், தருண் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம் உடுமலையில் இருந்து மூணாறு சாலை செல்லும் பகுதியில் தண்ணீர் தேடி யானைகள் ரோட்டை கடந்து செல்வதை படத்தில் காணலாம்.



## கிருஷ்ணகிரி சட்ட மன்றத் தொகுதி தீவிர வாக்காளர் திருத்தம் குறித்து அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர்களின் ஆலோசனைக் கூட்டம்!

கிருஷ்ணகிரி,நவ.15

வருவாய் கோட்டாச்சியர் ஷாஜாஹான் தலைமையில் நடைப்பெற்ற இக்கூட்டத்திற்கு வட்டாச்சியர் பிரகாஷ், ஆணையாளர் சதிஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைப்பெற்ற இக்கூட்டத்திற்கு அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கடசியை சேர்ந்த தேசிய மக்கள் கட்சியின் மாவட்டத் தலைவர் டாக்டர் சந்திரமோகன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்ட

இக் கூட்டத்தில் 2026 ல் நடைப்பெற உள்ள சட்ட மன்ற தேர்தலில் தகுதி உள்ள வாக்காளர்கள் அனைவரும் இறுதி வாக்காளார் பட்டியலில் இடம் பெற வேண்டும், அதற்கான பணிகளில் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும்,

குறிப்பாக இந்திய தேர்தல் ஆணையத்தின்மூலமாககொடுக்கபட்டுள்ளஎஸ்.ஐ. ஆர். படிவத்தினை பூர்த்தி செய்து விரைவாக அந்த , அந்த பி.எல்.ஓ. பணியாளர்களிடம் கொடுக்க முன்வர வேண்டும் என்று வருவாய் கோட்டாட்ச்சியர் ஷாஜாஹான் குறிப்பிட்டார், இதனைத் தொடர்ந்து பேசிய தேசிய மக்கள் கட்சியின் மாவட்டத் தலைவர் டாக்டர் சந்திர மோகன் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலமாகவழங்கப்பட்டுள்ளஎஸ்.ஐ.ஆர். படிவத்தினை வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று பி.எல்.ஓ. பணியாளர்கள் வழங்கி வருகின்றனர், இப்பணியாளர்கள் மிக குறைந்த அளவிலேயே பணியாளர்கள் நியமிக்கப்பட்டு இருட்டதால் பணியாளர்கள் மிகுந்த கிரமத்திற்கு ஆளாகி உள்ளனர், ஆகையால் இப்பணிகளை விரைவாகவும், சிரமமின்றி செய்து முடிக்க பி.எல்.ஓ. பணியாளர்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று டாக்டர் சந்திர மோகன் கோரிக்கை விடுத்தார்.

மேலும் இந்தக் கூட்டதின் போது வருவாய் கோட்டாச்சியர் ஷாஜாஹான் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இறந்து போனவர்களின் அடங்கிய பட்டியலை வெளிட்டார் இதனை அங்கிகரிக்கப்பட அரசியல் கட்சியை சேர்ந்த டாக்டர் சந்திரமோகன் பெற்றுக் கொண்டார்.